Tc-19

001/DM/19

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

# DEPARTMENTAL EXAMINATIONS

## SECOND CLASS LANGUAGE TEST — PART – A WRITTEN EXAMINATION (TRANSLATION, COMPOSITION, LETTER WRITING AND LANGUAGE SKILLS)

(Without Books)

Maximum Time : 2.30 hours

Maximum Marks : 100

குறிப்பு :

1. **அனைத்து வினாக்களுக்கும் விடையளி.**

2. **வினாத்தாள் மூன்று பகுதிகளைக் கொண்டது.**

3. **கையெழுத்து தெளிவாகவும், விடைகள் குறித்த அளவினதாகவும் இருத்தல் வேண்டும்.**

### பகுதி — 1

1. ஆங்கிலப் பத்தியை – தமிழாக்கம் செய்க. (10)

Air pollution is high in the urban and industrial centers. It threatens the life of the people and animals. The gases from industrial centers go higher than oxygen in the air and make it polluted. Pollution affects plants, animals and human beings. It causes diseases like asthma and cancer. Small children are easily affected.

கீழ்க்காணும் தலைப்புகள் ஒவ்வொன்றிற்கும் 150 சொற்களுக்கு மிகாமல் கட்டுரை எழுதுக. (2 × 15 = 30)

2. மக்கள் தொகைப் பெருக்கம்.

3. அனைவருக்கும் கல்வி.

4. ஈட்டிய விடுப்பு வேண்டி உரிய அலுவலருக்கு விண்ணப்பம் எழுதுக. (10)

[Turn over

## பகுதி — 2

5. கொடுக்கப்பட்டுள்ள உரைநடைப் பத்தியைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு விடையளி. (5 × 1 = 5)

வினையே ஆடவர்க்குயிர் என்கிறது குறுந்தொகை முந்நீர் வழக்கம் மகடூஉ வோடில்லை என்கிறது தொல்காப்பியம். சங்க காலத்தில் பொருளீட்டுவோர் ஆண்களே எனவும், பெண்கள் குடும்பத்தைப் பொறுப்புடன் நடத்தவேண்டும் எனவும் பெண்கள் கடல் கடந்து செல்லக் கூடாதெனவும் கூறிவந்தனர். இன்று இந்த நிலை முற்றிலும் மாறிவிட்டது. ஆண்களுக்கு நிகராகப் பெண்களும் எல்லா துறைகளிலும் பணிபுரிந்து வருகிறார்கள். இன்றைய சூழலில் இருவரும் வருவாய் ஈட்டினால் தான் குடும்பத்தைச் சிறப்பாக நடத்த இயலும். பள்ளிக் கல்வியை முடித்த ஒருவர் அதற்கு மேல் என்னென்ன படிப்புகளை மேற்கொண்டு வேலை வாய்ப்பினைப் பெறலாம் என்பது குறித்த விழிப்புணர்வை ஒவ்வொருவரும் பெற வேண்டும். தற்போது மேல்நிலைக் கல்வியில் தேர்ச்சி என்பது தான் பெரும்பாலான பணிகளுக்கும் அடிப்படை என்னும் நிலை உருவாகியுள்ளது.

வினாக்கள் :

(அ) ஆடவர்க்குயிராகக் குறுந்தொகை எதைக் குறிப்பிடுகிறது?

(ஆ) முந்நீர் – விரித்தெழுதுக.

(இ) மகடூஉ – இச்சொல்லின் பொருள் யாது?

(ஈ) தற்போது பெரும்பாலான பணிகளுக்கு அடிப்படையாக அமையும் கல்வி எது?

(உ) குடும்பத்தைச் சிறப்பாக நடத்த என்ன செய்ய வேண்டும்?

6. கொடுக்கப்பட்டுள்ள சூழ்நிலைக்கேற்ப உரையாடலை நிறைவு செய்க. (5 × 1 = 5)

பேருந்தில் பயணம் செய்யும்போது

நடத்துநர் : ________________.

பயணி : கருமண்டபம் ஒரு டிக்கெட் கொடுங்கள்

நடத்துநர் : ________________.

பயணி : நான், தெரியாமல் ஏறி விட்டேன், என்ன செய்வது?

நடத்துநர் : ________________.

பயணி : கருமண்டபம் போக, எந்த பேருந்தில் ஏற வேண்டும்?

நடத்துநர் : ________________.

பயணி : கருமண்டபத்திற்கு டிக்கெட் எவ்வளவு?

நடத்துநர் : பத்து ரூபாய்க்குள் இருக்கலாம்

பயணி : ________________.

## பகுதி — 3

மொழிப் பயிற்சி (40 × 1 = 40)

பின்வரும் வினாக்களுக்கு விடையளி :

7. 250 – எண்ணை எழுத்தால் எழுதுக.

8. ‘உள்ளங்கை நெல்லிக்கனி’ போல சொற்றொடரில் அமைத்து எழுதுக.

9. பைந்தமிழ் இலக்கணம் எத்தனை வகைப்படும்?

10. வாரத்தின் கடைசி நாள் (கிழமை) எது?

11. ‘பங்குனி’ – மாதத்திற்கு முந்தைய மாதம் எது?

12. ‘January’ – மாதத்தின் பெயரைத் தமிழில் எழுதுக.

13. விடுபட்ட எழுத்துக்களை எழுதுக.
கௌ ஙௌ ___ ஞௌ ___ ணௌ ___ ___ பௌ

14. அகர வரிசைப்படுத்தி எழுதுக.
நோட்டம், நொடித்தல், நாட்டம், நட்டம்

15. நெடில் எழுத்துக்களைக் கண்டறிந்து எடுத்தெழுதுக.
காவலர்கள் காவல் காத்தனர்.

உரிய நிறுத்தற்குறி இடுக.

16. செழியனே வாழ்க தமிழ்நாட்டின் தென்பகுதி தலைவனே வாழ்க

17. தமிழர் மனித வாழ்வை அகம் புறம் எனப் பிரித்தனர்

விடைக்கேற்ற வினா அமைத்தல் :

18. சிறுபஞ்ச மூலத்தை இயற்றியவர் காரியாசான்

19. இலக்கணம் வகுத்த பின்பே இலக்கியங்கள் தோன்றின

கீழ்க்கண்ட வினாவிற்கு ஏற்ற விடை எழுதுக.

20. தமிழ்நாட்டின் தேசிய மரம் எது?

21. இருபொருள் தருக
கழை

22. மயங்கொலிப் பிழைகளைத் திருத்தி எழுதுக.
அரம் செய விரும்பு

வினைச் சொற்களை எடுத்து எழுதுக.

23. சிங்கம் விரைவாக ஓடியது

24. ராமு நன்றாக விளையாடினான்

பிழைகளைத் திருத்தி எழுதுக.

25. தம்பி நேற்று வந்தாள்

26. என் மாமா வந்தது

27. இறந்தகாலச் சொல்லை எடுத்தெழுதுக :
வந்தார், வருவார், வருகின்றார்

28. பேச்சு வழக்குச் சொல்லை எழுத்து வழக்குச் சொல்லாக மாற்றுக.
அப்பிசி மாசம் அடமள என் பாங்க

29. குறில் நெடில் பிழையைக் கண்டறிந்து எழுதுக.
புவுடன் செர்ந்த நாரும் மாணக்கும்

30. முதல் எழுத்தை மாற்றி புதிய சொல் உருவாக்குக.
ரதம்

31. பிறமொழிச் சொல்லுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.
அலங்காரம்

நூலையும் நூலாசிரியர் பெயரையும் பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| 32. | திருவாசகம் | – | ஜெயங்கொண்டார் |
| 33. | திருப்பாவை | – | அருணகிரிநாதர் |
| 34. | திருப்புகழ் | – | மாணிக்கவாசகர் |
| 35. | கலிங்கத்துப்பரணி | – | ஆண்டாள் |

36. பால் வகையை எழுதுக.
குமரன்

37. திணை வகையை எழுதுக.
மாந்தர்

38. Cheque – தமிழாக்கம் செய்க.

சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

39. பறவைகள் ———————— தேடிச் சென்றன. (இரை/இறை)

40. ———————— நம்பிக்கை வேண்டும். (இறை, இரை)

41. 'தாகம்' – இடை எழுத்தை மாற்றி புதிய சொல் ஒன்று உருவாக்குக.

42. C.A., பட்டப்படிப்பைத் தமிழில் விரித்து எழுதுக.

43. பொருந்தாத சொல்லை எடுத்தெழுதுக.
சூரியன், நிலா, விண்மீன், மேகம்

44. பெயர்ச் சொல்லை எடுத்தெழுதுக.
(அ) மயில்
(ஆ) ஆடியது
(இ) பார்த்தது.

45. பொருந்தமான சொல்லை எழுதுக.
வேகமாக காற்று ———————— (வீசின, வீசியது)

46. அரி, அறி – என்பதன் பொருளை எழுதுக.